குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.164/2013

அ.சா.6

2025–ம் ஆண்டு ஜுலை 07–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | தொழில் | |
| தந்தை பெயர் | ராசு | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.43 மணி,

Accused Ganesan Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. Advocate Mr.K.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2025 ஆம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.04.2013 ஆம் தேதி ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, தர்மலிங்கம் த/பெ. பெரியண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று, நிலைய குற்ற எண்.233/2013 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(எ) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. )

2. பின்பு, அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் என்பவரின் பார்வைக்கும் வைத்தேன். காவல் ஆய்வாளர் 20.05.2013 ஆம் தேதி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. புகாரில் உள்ள கையெழுத்தும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்தும் ஒன்று தான் என்றால் சரியல்ல. புகாரை அ.சா.1 கைப்பட

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.07 17:24:04 +0530

எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதனடிப்படையில் நான் பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.25 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.07 17:24:09 +0530